[29th October 1962

பார்த்து வருகிறார். அநேகமாக அரசாங்கம் நடத்தும் பள்ளிக் கூடங்களில் எல்லாம் அப்படித்தான். அவை நாளா வட்டத்தில் தான் சர்க்காரின் மேற்பார்வையின்கீழ் வரும்.

திரு. சா. கணேசன்: அப்படியானால் ஜில்லா கல்வி அதிகாரி தான் இனி ஆசிரியர்களை நியமிப்பது, மாற்றுவது முதலிய பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் பல விதமான சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதனால் அப்படி யில்லாமல் நியாயமாகக் காரியங்கள் நடப்பதற்குத் தக்க வேறு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் யோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எப்படியிருந்தாலும் யாராவது ஒரு அதிகாரிதான் அதைப் பார்க்கவேண்டும். இப்போது ஜில்லா அதிகாரி என்று போட்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திற் கும் இரண்டு டெவலப்மெண்டு கவுன்சில் இருக்கிறது. டெவலப் மெண்டு கவுன்சில்களினால் நியமிக்கப்படுகிற இரண்டு எஜுகேஷன் ஸ்டாண்டிங் கமிட்டிகளும் இந்த அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுவார்கள். அவர்கள் யோசனைப்படியே அவ்வப்போது காரியங் கள் நடைபெறும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இவை காலக்கிரமத்தில் அரசாங் கப் பள்ளியாக மாறிவிடும் என்று கூறியதை நான் வரவேற் கிறேன். அதேபோல் இதில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் மாகாண சர்வீசின் கீழ் கொண்டுவரப்படுவார்களா? அல்லது தலைமை ஆசிரியராவது உடனடியாக அரசாங்க சர்வீசின் கீழ் கொண்டு வரப்பட்டு பதவி உயர்வுகளுக்கு வழி வகுக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தப் பிரச்னைகள் எல்லாம் இப்போது எழவில்லை. பின்னால்தான் வரும்.

வலையர்கள்

* 829 கேள்வி.—திரு சா. கணேசன்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் வலையர்களின் தொகை எவ்வளவு?

(இ) அவர்களின் வாழ்க்கை நிலை உயரவும் அவர்கட்கு குடி யிருப்பு வீடுகள் கட்டித்தரவும், அவர்களின் குழந்தைகள் முழு உண்டியும், உடையும், உபகரணங்களும் பெற்று கல்வி கற்கவும் அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்ய உத்தேசம்?

THE HON. SRI P. KAKKAN: (அ) The population figures for Valayar Community alone are not available.

) Valayar Community is classified as Most Backward Class in the Harijan Welfare Department and they are being given all the concessions which are allowed to persons belonging to the Most Backward Class. They are given full fee concessions and exemption from payment of enrolment fees for advocates. They are also provided with hostel facilities just as other Backward Classes.

29th October 1962]

திரு. சா. கணேசன் : எந்த பிற்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும்விட மிகத் தாழ்ந்த நிலையில் வலையர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பதனால் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்குக் கட்டாயப் படிப்பு, இலவச உணவு, உடை முதலியன கொடுப்பதற்கும், அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டு வசதி மற்ற இதர வசதிகள் செய்துகொடுப்பதற்கும் முன் வருவது நியாயமாகும், தர்மமும் ஆகும். அதை அரசாங்கம் செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நியாயமும், தர்மமும் செய்வதில் இந்த அரசாங்கம் எப்போதும் பின் வாங்கியது இல்லை. ஆயினும் மத்திய அரசாங்கம் கொடுக்கக் கூடிய வசதிகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு இதுபற்றிய விஷயம் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் இந்த வலையர் கம்யூனிடியைப் பொறுத்தவரையில் மாகாண சர்க்கார் மூலமாக எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்கிறோம். ஏற்கனவே டி நோடிபைட் கம்யூனிடியாக வலையர் கம்யூனிடி இருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாப் பக்கம் உள்ளவர்களுக்கு இப்போதே மாடு வாங்கிக் கொடுப்பது, வீடு கட்டிக்கொள்ள வசதி அளிப்பது ஆகிய எல்லா உதவிகளையும் செய்கிறோம். மேலும் சுதந்திராக் கட்சித் தலைவர் அந்த சமூகத்தினரை "வலையர்கள்" என்று குறிப்பிட்டார். அதுமாதிரியாகச் சொல்வதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் தங்களை மூப்பமார் என்று சொல்வதையே விரும்புகிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் என்று மைசூர் அரசாங்கம் பிரிவு செய்வதை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட் மூலமாக அது செல்லுபடியாகாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது நமது அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்ததா ? அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இவ் விஷயத்தைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தப் பிரச்னையைப் பரிசீலனை செய்து ஏற்கனவே இதுபற்றி தீர்மானித்துவிட்டோம்.

திரு. சா. கணேசன் : வலையர்கள் என்று சொல்வதை வேறு பக்கத்திலே உள்ளவர்கள் வெறுக்கிறார்களோ என்னமோ ? புதுக்கோட்டை, திருப்பத்தூர் போன்ற இடங்களில் வலையர்கள் என்றால் வேறு, மூப்பமார் என்றால் வேறு. வலையை உபயோகித்து காடுகளிலே விலங்குகளைப் பிடிக்கிறவர்களுக்குத்தான் வலையர்கள் என்று பெயர். இதில் தவறு ஒன்றும் இல்லை. ரெக்கார்டுகளில் இப்படித்தான் இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : நானே ஒரு கூட்டத்தில் பேசும்போது வலையர்கள் என்று குறிப்பிட்டேன் "மந்திரி இப்படிப் பேசிவிட்டார்" என்று ஆட்சேபித்தார்கள். அதனால்தான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

திரு. கோ. சி. மணி : கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மூப்பனாராலும், சுதந்திராக் கட்சித் தலைவர் குறிப்பிட்ட வலையாராலும் இன்றைக்கு அந்தப் பிற்பட்ட சமூகத்தினர் பெருவாரியாக எந்தத் தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன் : உழவுத் தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள்.

பள்ளியிறுதித் தேர்வு சர்டிபிகேட்

*831 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) சர்டிபிகேட் புத்தகத்தில் ஒவ்வொரு பாடத்திற்குமான மாநிலச் சராசரி மார்க்கு குறிக்கப்படும் வழக்கம் இவ்வாண்டு மட்டும் கைவிடப்பட்டிருப்பது ஏன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Board of Secondary Education decided that the entry of the State Average in the Secondary School-Leaving Certificate was not essential as it did not serve any purpose and even created some confusion. Accordingly, no provision was made for the entry of the State Average in the Secondary School-Leaving Certificates issued under the Reorganised Scheme of Secondary Education.

புலவர் கா. கோவிந்தன் : மாகாண சராசரி மார்க் போடுவதால் பயன் இல்லையென்று கனம் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாணவன் பெற்ற மார்க், பள்ளியின் சராசரி மார்க், மாகாணத்தின் சராசரி மார்க் போடுவது நிலைமையைச் சரியாகக் காட்டுவதாக இருக்கும். அது எப்படி பயன் அற்றதாக இருக்கும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி எல்லாம் முடிவு செய்வது போர்ட் ஆப் செகண்டரி எஜுகேஷன். அவர்கள் தான் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து ஸ்டேட் ஆவரேஜ் போட வேண்டாமென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

செஞ்சியில் விடுதி கட்டுதல்

SRIMATHI T. N. ANANDANAYAKI : Question No. 830 has not been taken up.

MR. SPEAKER : It will be taken up now.

*830 கேள்வி.—திரு. கு. கோபாலகவுண்டர் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சிக்கோட்டையை பார்க்க வரும் யாத்ரிகர்களுக்காக செஞ்சியில் ஒரு டூரிஸ்ட் ஹோம் கட்ட உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால் எப்போது கட்டப்படும்?

THE HON. SRI G. BHUVARAHAN : (a) No, Sir.

(b) Does not arise.